சுருக்கம்

பள்ளிக்கல்வி – பொது நூலகங்கள் – 2018–19–ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள் – "படித்த இளைஞர்கள் போட்டித் தேர்வுகள் குறித்த விவரங்களைப் பெற மென்பொருள் உருவாக்குதல்" – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக்கல்வி (பொ.நூ.1)த்துறை

அரசாணை (நிலை) எண்.157 நாள் 27.07.2018

திருவள்ளுவராண்டு, 2049
விளம்பி வருடம், ஆடி–11

படிக்கப்பட்டவை:–

பொது நூலக இயக்குநரின் கடித ந.க.எண்.5766/உ3/2018, நாள் 11.06.2018 மற்றும் 27.06.2018.

~*~~*~

ஆணை:–

2018–19–ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

"படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதில் பொது நூலகங்களின் பங்கு இன்றியமையாதது. பொது நூலகங்களில் குடிமைப்பணித் தேர்வுகள் உட்பட அனைத்து போட்டித் தேர்வுகளுக்கும் தயாராகும் போட்டியாளர்களுக்குத் தேவைப்படும் தகவல்கள் மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பான அனைத்து விவரங்களும் உரிய நேரத்தில் சென்றடையும் வகையில் மென்பொருள் உருவாக்கப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இத்திட்டத்திற்கு ரூ.5 இலட்சம் செலவிடப்படும்."

2. மேலே படிக்கப்பட்ட கடிதங்களில், தமிழகத்தில் செயல்படும் பொது நூலகங்களில் குடிமைப்பணித் தேர்வுகள் உட்பட அனைத்து போட்டித் தேர்வுகளுக்கும் தயாராகும் போட்டியாளர்களின் வருகை அதிகரித்துள்ளதனைத் தொடர்ந்து, வருங்காலங்களில் படித்த இளைஞர்களுக்குத் தேவைப்படும் தகவல்கள் மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பான அனைத்து விவரங்களும் உரிய நேரத்தில் பயனாளிகளைச் சென்றடையும் வகையில், இணையம் மற்றும் அலைபேசிகளைப் பெருமளவில் பயன்படுத்தும் இன்றைய இளைய தலைமுறையினருக்கு அனைத்து தகவல்களையும் விரைந்து, இருக்கும் இடத்திலிருந்தே பெறுவதற்கும், குறிப்பாக வேலை வாய்ப்பு சார்ந்த தகவல்களை வழங்கி இளைய தலைமுறையினரை நூலகத்திற்கு வரவழைக்கும் புதிய உத்தியினை கையாளும் புதிய முயற்சியினை மேற்கொள்வதற்கும் 'உங்கள் நூலகம் உள்ளங்கையில்' என்ற பயன்பாட்டு செயலி (App) மற்றும் வளைத்தளம் ரூ.5 இலட்சம் மதிப்பில் உரிய விதிமுறைகளின்படி தேர்வு செய்யப்படும் நிறுவனம் மூலம் உருவாக்கவும், இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான செலவினம் ரூ.5 இலட்சத்தை (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மாவட்ட நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து பெற்று மேற்கொள்ளவும் அனுமதி அளித்து ஆணை வழங்குமாறு பொது நூலக இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

(த.பி.பா.)

3. பொது நூலக இயக்குநரின் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு, அதனை ஏற்று, 2018–2019ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்ட அறிவிப்பான "படித்த இளைஞர்கள் போட்டித் தேர்வுகள் குறித்த விவரங்களைப் பெற மென்பொருள் உருவாக்குதல்" என்ற அறிவிப்பினை செயல்படுத்திட, படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதில் பொது நூலகங்களின் பங்கு இன்றியமையாதது என்பதால் பொது நூலகங்களில் குடிமைப்பணித் தேர்வுகள் உட்பட அனைத்து போட்டித் தேர்வுகளுக்கும் தயாராகும் போட்டியாளர்களுக்குத் தேவைப்படும் தகவல்கள் மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பான அனைத்து விவரங்களும் உரிய நேரத்தில் சென்றடையும் வகையில் உங்கள் நூலகம் உள்ளங்கையில்' என்ற பயன்பாட்டு செயலி (App) மற்றும் வளைத்தளம் உருவாக்கவும், இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான செலவினம் ரூ.5 இலட்சத்தை (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மாவட்ட நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து பெற்று மேற்கொள்ளவும் பொது நூலக இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.2503/கூ.த.செ.(நிதி)/2018, நாள்12.07.2018–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பொது நூலக இயக்குநர் (கூ.பொ), சென்னை – 2.
<u>நகல்:–</u>
முதன்மைச் செயலாளர்,
சிறப்புத் திட்ட அமலாக்கத்துறை, சென்னை–9.
நிதி (கல்வி–II)த்துறை, சென்னை–9.
பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களின்
முதன்மைத் தனிச் செயலர், சென்னை–9.
பள்ளிக்கல்வி (வரவு செலவு)த்துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.